தேவதிட்டத்தின் தெளிவான நிலை

"தேவன் தந்த திட்டம்" என்ற சொற்றொரடர் ஏறக்குறைய எல்லாராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதுபிரபலமாகியும் விட்டது. ஒரு திட்டம் தேவனால் தரப்பட்டதா, இல்லையா? எனப் பகுத்தறிவது பல நேரங்களில் பலருக்கு குழப்பமானதாகவே இருக்கிறது. அதற்கு உதவியாக சில குறிப்புகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எவர்கள் தேவன் தங்களுக்கு ஒரு திட்டத்தை தந்துள்ளார், என உரிமைப் பாராட்டி (Claiming) அதை மக்கள் முன் வைக்கிறார்களோ, அவர்களை சற்றுக் கவனித்துப் பார்த்தாலே, தெளிவு பெற்று விடமுடியும்.

தேவனால் தரப்படாத திட்டத்தை, தேவத்திட்டம், என முன் நிறுத்துவோருக்குள் கீழ்க்கண்ட 5 அடையாளங்கள் காணப்படும்:-

1. அத்திட்டம் நிதி சேகரிப்பதற்கு வியாபாரத் தந்திரங்களை கையாளக்கூடிய நிலைமைக்குள் அவர்களை நடத்திவிடும்.

ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு சில நேர்மையான உத்திகளை கையாள்வது தவறல்ல. காணிக்கை பெறுவதற்கு உரிமையுள்ள சந்தர்ப்பத்தில் கூட காணிக்கை பெறாமல் ஊழியம் செய்ததன் மூலம்,ம துவக்கக் காலத்தில் கொரிந்து மக்களை தந்திரமாக ஆதாயம் செய்ததை, பவுல் இவ்விதம் குறிப்பிடுகிறான், "உபாயம் உள்ளவனாயிருந்து தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்" (2 கொ.12:16) ஆனால், அதற்கு நேர் மாறாக, பணம் திரட்டுவதற்கு, தந்திரங்களைக் கையாள்வோரை, பேதுரு இவ்விதமாக வர்ணிக்கிறான். பொருளாசையுடையவர்களாய், தந்திரங்களைக் கையாள்வோரை, பேதுரு இவ்விதமாக வர்ணிக்கிறான். "பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்வார்கள்" (2 பேதுரு 2:3)

2. அத்திட்டம், அவர்களது மனதை, இரவும் பகலும் நிதி சேகரிப்பு பற்றிய எண்ணங்களாலேயே நிரப்பிவிடும் (Mentally Occupied)

பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாய் இருக்கடவோம். (பிலி. 3:15) என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ள "பரம அழைப்பின் பந்தயப் பொருளின் சிந்தை"யை இழந்துவிடுவார்கள். அதே வசனத்தின் பின் பகுதியில் கூறப்பட்டுள்ள "வேறே சிந்தை" அவர்களுக்குள் உருவாகிவிடக்கூடிய அபாயமுண்டு.

3. அவர்களது சாதாரண உரையாடல்கள் முதற்கொண்டு பிசங்கங்கள் வரை, நிதிசேகரிப்பே மேலோங்கி ஒலிக்கும்.

"வேதத்தை ஆசாரியனின் வாயிலே தேடுவோர்களே. அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" (மல் 2:7) என்ற நிலை மாறி, ஆசாரியனின் வாய், மக்களுடைய கையிலே பணத்தை தேடத்துவங்கிவிடக் கூடிய ஆபத்து வந்துவிடும்.

4. அவர்கள் தேவராஜ்யத்தின் முழு வீச்சை (Over all view) கண்ணோக்க இயலாதபடி பார்வையில் கோளாறு வந்துவிடும்:-

தேவத்திட்டத்திலிருந்து விலகி சுயத்திட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த அப்போஸ்தலனால் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை முன்னோக்க இயவாமல் போய்விட்டது. ஆனால் 300 பணத்தை துச்சமாக எண்ணிய மரியாளால் கிறிஸ்துவை அடக்கம் பண்ணும் நாளைக்கூட முனோக்க முடிந்தது. ராஜ்யத்தின் செய்தியின் ஒரு பகுதியாக அவளது செய்கையும் இடம்பிடித்தது (யோ. 12:4-7)

5. அவர்களுக்குள்ளே பணத்தேவையைப் பற்றிய மனக்கலக்கம் (துசரளவரயவழைெ) எப்போதும் இருந்து கொண்டே இருக்கும்.

நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன். (பிலி. 4:11) என்ற பிரகடனத்தை பவுல் எப்போது செய்தான்? பணத்தேவைகளையும், அவை சந்திக்கப்படுகிறதையும் பற்றி எழுதுகிற சூழலில் (ஊழவெநஒவ) தான். அவனுக்கு சபைகளைப் பற்றிய கவலையும், விசுவாசிகள் வஞ்சிக்கப்பட்டுவிடுவார்களோ என்ற பயமும் தான் இருந்ததே தவிர பணத்தைப் பற்றிய கலக்கம் கொஞ்சமும் இருந்ததில்லை.

தேவத்திட்டங்கள் அல்லாதவற்றை தேவதிட்டங்கள், என்று அவர்கள் பெற்றெடுப்பதற்கு என்ன காரணம்? அவை எங்கிருந்து உதயமாகின்றன? அவர்களது விருப்பங்களிலிந்தும், கனவுகளிலிருந்தும் அவை பிறக்கின்றன. பிறரது புதிய செயலாக்கங்களைக் காண்பதின் மூலமும், பிறரோடு தங்களை ஒப்பிடுவதன் மூலமும் இத்திட்டங்கள் உருவெடுக்கின்றன.

அவர்கள் தங்கள் சுயவிருப்பத்தினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு கனவு காண்கிறார்கள்: பின்பு கனவானத கர்ப்பந்தரிந்து, திட்டங்களைப் பிறப்பிக்கும்.

1). தெளிவுள்ளவர்களாய் இருப்பார்கள்.
"நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு" (2 தீமேமா 4:5) என்று பிறருக்கு கட்டளையிடுவதற்குத் தகுதியுள்ளவர்களாய் விளங்குவார்கள்.

2). நிதி தரும்படி எவரும் எவரையுமு நெருக்கமாட்டார்கள் (ீசநளளரசணைபெ)
மோசேக்கு ஆசரிப்புக் கூடாரத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை தேவன் தந்தபோது அவன் எவரையும் நிதிக்காக நெருக்கவில்லை. வறண்ட வனாந்திரத்திலே பெரும் செலவுபிடிக்கும் திட்டத்திற்கு மக்கள் போதும் இனி வேண்டாம் என்று கூறும் அளவிற்கு அள்ளித்ததந்தார்கள்.

எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ் அவர்கள்
மனப்பூர்வமுள்ள ஸ்திரீ, புருஷர் யாவரும்
மனப்பூர்வமாய்க கொண்டுவந்தார்கள் (யாத் 35:4-29)

3). பணத்தேவையைப் பற்றி பூரணசமாதானமுடையவர்களாக இருப்பார்கள்.
(எந்த மனக்கலக்கமும் இருக்காது)
பொன் வெள்ளி எதுவுமின்றி வெறுங்கையாக பன்னிருவரை ஊழியத்திற்கு அனுப்பியபோது, இயேசு கூறினார், ஒரு வீட்டிற்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது. அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்தில் திரும்பக்கடவது" (மத்தேயு 10:9-13)

அடுத்தவேளை உணவிற்கு உத்திரவாதம் இல்லாதபோதும் தேவதிட்டத்தில் இருந்தபடியால் பிறருக்கு சமாதானத்தைக் கூறுமளவிற்கு நிரம்பி வழிந்துகொண்டிருந்தனர்.